**Translation**

எனது இல: பிஎஸ்/பிசிஏ/ டிசிசி/ 06/26
2022 செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி

**செயலாளர்**
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

செயலாளர் அவர்களே

**மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுப் பொறிமுறையை ஒழுங்காக முன்னெடுத்தல்**

அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மாவட்ட அடிப்படையில் ஒருங்கிணைத்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்காக மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் குறிப்பிட்டட அரச அதிகாரிகளை உள்ளடக்கிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களை இயங்கச்செய்யும் நோக்குடன் மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

02. மேலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுப் பொறிமுறைமையை முறையாக முன்னெடுப்தற்காக மாண்புமிகு சனாதிபதி பின்வருமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்:

i. மாதாந்தம் மாவட்டக் குழுக் கூட்டங்களை நடத்துதல், மாவட்டச் செயலாளர்கள் அந்தக் கூட்டங்களுக்கான அழைப்பாளர்களாகச் செயற்பட வேண்டுமென்பதுடன் அதனுடன் தொடர்புபட்ட அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்தல் வேண்டும்.

ii. மாவட்டக் குழுக் கூட்டங்களின்போது எழும் பிரச்சினைகள் தொடர்பாகக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருதடவை அல்லது பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மூலம் அமைச்சரவைக்குத் தெளிவுபடுத்துவதற்கான தகுந்த பொறிமுறையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.

iii. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகளை முறையாக முன்னெடுப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்குக் குறிப்பிட்ட மாவட்டச் செயலக வளவில் அலுவலக வசதிகளைச் செய்துகொடுத்தல் வேண்டும்.

iv. மாவட்டச் செயலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர்களுள் 04 பேர், பிரத்தியேக உதவியாளர் ஒருவர் (MN1-2016 சம்பள அளவுத்திட்டம்), அலுவலகப் பணியாளர் சேவை உத்தியோகத்தரொருவர் மற்றும் சாரதி ஒருவரை உள்ளடக்கிய உதவிப் பதவியணியொன்றை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கடமைகளுக்காக நியமித்தல் வேண்டும்.

v. மேலே iv இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரத்தியேக உதவியாளர் மற்றும் சாரதி ஆகிய பதவிகளுக்கு மாத்திரம் சேவையின் அவசியத்தின்படி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் சிபார்சின் அடிப்படையில் அவரது / அவளது பதவிக்காலத்துக்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் அமய அல்லது ஒப்பந்த அடிப்படையில் தகுந்த நபர்களை நியமித்தல்.

vi. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வ வாகனமொன்றை வழங்குவதுடன் அவ்வாகனத்துக்கு மாதமொன்றுக்கு 300 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட வேண்டும்.

03. இதன்படி மாண்புமிகு சனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்டுள்ள மேற்கூறிய கட்டளைகளின்படி நடவடிக்கை எடுப்பதற்கு சகல மாவட்டச் செயலாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குமாறும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளருடன் உரிய தொடர்பினை ஏற்படுத்தித் தேவையான நிதியை மாவட்ட செயலகங்களின் செலவுத் தலைப்பிலிருந்து ஒதுக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கின்றேன்.

நன்றி

இங்ஙனம் - விசுவாசமுள்ள

**ஒப்பம்: ஈ.எம்.எஸ்.பீ.ஏக்கநாயக்க**
சனாதிபதியின் செயலாளர்
தொலைபேசி : +94 11 2354420 தொலைநகல்: +94 11 2446657
மின்னஞ்சல் : prsec@presidentsoffice.lk

பிரதிகள்:

1. சகல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்
2. பிரதமரின் செயலாளர்
3. செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
4. சகல மாவட்டச் செயலாளர்கள்
5. கணக்காய்வாளர் அதிபதி

**..................... மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் நிகழ்ச்சிநிரல் - 2022 செத்தெம்பர்**
**இடம்: மாவட்டச் செயலகம் - மு.ப.9.00**

| | | | | |
|---|---|---|---|---|
| ➢ | | வரவேற்பு | மு.ப.9.00 - மு.ப.9.02 | மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் |
| 1. | | தேசிய மட்டத்தில் நடைமுறையில் இருக்கும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு | | |
| | 1.2 | கிராமியப் பொருளாதாரப் புத்துயிரூட்டல் கேந்திர நிலையங்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டம் | மு.ப.9.00-மு.ப.9.40 | |
| | 1.1.1 | பொருளாதாரப் பாதுகாப்பு | | விவசாய, சுகாதார, கால்நடை, மீன்பிடி, சுற்றுலாத் துறைகளின் நிறுவனத் தலைவர்கள் |
| | 1.1.2 | வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் | | |
| | 1.1.3 | நடுத்தர அளவிலான கைத்தொழில் | | |
| | 1.3 | நீர்ப்பாசன சௌபாக்கித் தேசியத் திட்டம் | | நீர்ப்பாசன நிறுவனத் தலைவர்கள் |
| | 1.4 | ..... | | |
| 02. | | மாவட்ட மட்டத்தில் நடைமுறையிலிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு | மு.ப.9.40 முதல் மு.ப.10.20 | |
| | 2.1 | ........... மாவட்ட மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | | பணிப்பாளர் மூ.அ.கருத்திட்டம் |
| | 2.2 | ........... நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | | நகர அபிவிருத்தி அதிகார சபை, .... மாநகர சபை |
| | 2.3 | ............. வைத்தியசாலை அபிவிருத்திப் பணிகள் | | வைத்தியசாலை பணிப்பாளர்/சுகாதாரத் தலைவர்கள் |
| | 2.4 | அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலைக் கருத்திட்டம் | | மாகாண கல்வி தலைவர்கள் |
| 03. | | மாவட்டத்தின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்குரிய நிறுவனங்கள் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுசுகள் | மு.ப.10.20 முதல் மு.ப.10.50 | நிறுவனத் தலைவர்கள் |
| | 3.1 | ஹெலவிரு டிஜிட்டல், விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் மென்பொருளை அறிமுகப்படுத்துதல் | | மாகாண கமத்தொழில் அமைச்சு |
| | 3.2 | ......... | | |
| 04. | | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெறவேண்டிய முன்மொழிவுகள் | மு.ப.10.50 முதல் மு.ப.10.55 | நிறுவனத் தலைவர்கள் |
| 05. | | பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் சமர்ப்பித்துத் தீர்வு கிடைக்காத விசேட பிரச்சினைகள் | மு.ப.10.55 முதல் மு.ப.11.00 | உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள் / பிரதேச செயலாளர்கள் |
| 06. | | மாவட்டக் குழுக்கள் எடுத்த தீர்மானங்களை அறிவித்தல் | மு.ப.11.20 முதல் மு.ப.11..25 | மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் |

நன்றி / நிறைவு

* கவனத்தில் கொள்க: இது மாதிரிப் படிவமாகும்